செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 487 நாள் : 11/

# பத்திரிகை செய்தி

## தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் உர விற்பனை செய்ய பாயிண்ட் ஆப் சேல் கருவி விநியோகம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்

நாடு முழுவதும் மானிய விலையில் விவசாயிகளுக்கு உரம் விற்பனையை முறைபடுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக பாயிண்ட் ஆப் சேல் கருவியின் மூலம் ஆதார் எண்ணை பயன்படுத்தி உரத்தை விவசாயிகளுக்கு விற்கப்படவேண்டும். பாயிண்ட் ஆப் சேல் கருவி பயன்படுத்துவது குறித்து மாவட்டத்தில் உள்ள அனைத்து வேளாண்மை உதவி இயக்குநர்கள், வேளாண்மை அலுவலர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள், மொத்த விற்பனையாளர்கள் மற்றும் தனியார் விற்பனையாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுவிட்டது. இக்கருவி மூலம் உரங்களை விற்பனை செய்ய முதல் கட்டமாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு கிரிப்கோ நிறுவனம் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இலவசமாக வழங்கி தொடங்கிவைத்தார். மேலும் மற்ற தனியார் விற்பனையளார்களுக்கு விரைவில் பாயிண்ட் ஆப் சேல் கருவி வழங்க பாக்ட் நிறுவனத்தின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இனி வரும் நாட்களில் தனியார் உர விற்பனை நிலையங்கள் மற்றும் கூட்டுறவு உர விற்பனை நிலையங்களில் பாயிண்ட் ஆப் சேல் கருவியின் மூலம்தான் உரத்தை விற்பனை செய்யப்படவேண்டும். உரத்தை பெறும் விவசாயி தனது ஆதார் அடையாள அட்டையை எடுத்துவரவேண்டும். மேலும் உரத்தை வாங்கும் விவசாயி தனது கைவிரல் ரேகையை பாயிண்ட் ஆப் சேல் கருவியில் பதிவு செய்தபின் தான் உரம் வாங்க முடியும். இதன்மூலம் விவசாயப் பணிகள் அல்லாத வேறு பயன்பாட்டிற்கு உரத்தை பயன்படுத்துவதை தடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் மாவட்டத்தில் உள்ள உரத்தின் இருப்பு மற்றும் தேவை உள்ளிட்ட விவரங்களை விவசாயிகள் எளிதாக தெரிந்துகொள்ள முடியும்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் திரு. ப. வாசுதேவரெட்டி, வேளாண்மை துணை இயக்குநர்/மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திருமதி ச. சுப்புலெட்சுமி, மத்திய அரசின் மாநில ஒருங்கிணைப்பாளர் திரு அருண்ராஜ், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) திரு. கு. நெப்போலியன், வேளாண்மை அலுவலர் திரு வி. முருகன், கிரிப்கோ உர நிறுவன மேலாளர் திரு ராமராசு மற்றும் வேளாண்மை அலுவலர் திருமதி திலகவதி ஆகியோர் பங்கேற்றனர்.

11/8/17
செ.ம.தொ.து.
வேலூர் - 9.